**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 768/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**5 |
| Name | : | **இந்திரா** (**காவல் ஆய்வாளர்**) |
| Father's / Husband Name | : | **ரத்தினசாமி** |
| Address | : | **ஊரக காவல் நிலையம்** |
| Age | : | 46/2026 |

**தேதி : 25.06.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ஆ. சத்தியபாமா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. **எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பலூர் ஊரக காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். கடந்த 26.01.2025ம் தேதி அன்று மேற்படி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பாண்டியன் என்பவரும், காவல் ஆய்வாளராக சதீஸ்குமார் என்பவரும் அவர்களுக்கு பின்னிட்டு காவல் ஆய்வாளர் நானும் பணியில் இருந்து வரும் நிலையில் மேற்படி இருவரும் பணிமாறுதல் பெற்று வேறு காவல் நிலையத்தில் பணி செய்வதாலும், அ.சா. 1 முதல் 4 வரையிலான அரசு தரப்பு சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை சார்ந்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும், மேற்படி நபர்களுக்காகவும், எனக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 26.01.2025ம் தேதி அன்று சிறப்பு உதவி ஆய்வாளர் பாண்டியன் நிலைய பொறுப்பில்இருந்தபோது அ.சா. 1 சுந்தரராசு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அதனை பரிசீலனை செய்து அதன்தன்மைக்கேற்ப மேற்படி காவல் நிலைய குற்ற எண். 29/2025 BNS 281, 125(a), 106 ன்படி

வழக்கு பதிவு செய்துள்ளார். **அ.சா. 1 கொடுத்த புகார் அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் பதிவு செய்த முதல்தகவல் அறிக்கை அ.த.சா.ஆ– 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மேற்படி காவல் ஆய்வாளர் வழக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் ரங்கராஜ், சேகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடம் குறித்து பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ. 4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ. 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இவ்வழக்கு சம்பவ விபத்தில் இறந்துபோன அரவிந்த் என்பவருடைய சடலத்தை கைப்பற்றி மருத்துவமனை முன்பாக சாட்சிகளின் முன்னிலையில் விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை ஒன்று காவல் ஆய்வாளர் தயார் செய்துள்ளார். **அரவிந்த் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ– 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் காவல் ஆய்வாளரின் பரிந்துரை கடிதத்தையும், விபத்தில் இறந்துபோன அரவிந்த் என்பவரின் சடலத்தையும் முதல் நிலை காவலர் விக்னேஷ் என்பவரின் மூலமாக மருத்துவர் குமார் அவர்களிடம் முன்னிலைப்படுத்தப்பட்டு அடையாளம் காண்பிக்கப்பட்ட பின்னர் பிரேத்தை மருத்துவர் கூராய்வு செய்துள்ளார். அவரை விசாரித்து சடல கூராய்வு அறிக்கை ஒன்று பெறப்பட்டது. **அந்த சடல கூராய்வு அறிக்கை அ.த.சா.ஆ– 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் சுந்தரராசு, சாம்குமார், ஆனந்தன், பிரபு, திருநீலகண்ணன், சேகர், ரங்கராஜ், விக்னேஷ் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

இந்த வழக்கு சம்பவத்தில் ஈடுபட்ட வாகனங்களான TN 46 V 7333 என்ற இருசக்கர வாகனத்தையும், TN 57 AJ 9316 என்ற வாகனத்தையும் கைப்பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் சரவணபவன் என்பவரிடம் முன்னிலைப்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொண்ட பின்னர் அவரை விசாரித்து ஆய்வறிக்கைகள் இரண்டு பெறப்பட்டது. **TN 46 V 7333 என்ற இருசக்கர**

**வாகனத்தின் ஆய்வறிக்கை அ.த.சா.ஆ. 8 ஆகவும், TN 57 AJ 9316 என்ற வாகனத்தின் ஆய்வறிக்கை அ.த.சா.ஆ. 9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

இவ்வழக்கு சம்பவத்தில் காயமடைந்த மற்ற நபர்களுக்கு மருத்துவனையனில் சிகிச்சை அளித்த மருத்துவர்கள் விவேக், பரணி ஆகியோரை விசாரித்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று தனித்தனியே பெறப்பட்டது. **அவை முறையே அ.த.சா.ஆ–10, 11, 12 மற்றும் 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இவ்வழக்கின் எதிரியை கடந்த 26.01.2025ம் தேதி அன்று கைது செய்து தக்க காவல் நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். மற்ற சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில் எதிரியின் செய்கையானது BNS பிரிவு 281, 125(b), 106 ன்படி சட்டபிரிவு மாற்றல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. **சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ. 14 ஆகு குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பிரிவின் கீழ் எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை கடந்த 05.08.2025ம் தேதியில் தாக்கல் செய்துள்ளேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

ஒரு இருசக்கர வாகனத்தில் தலைகவசம் அணியாமல் மூன்று நபர்கள் வாகனத்தில் செல்வது தவறு என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் 25.01.2025 என்றாலும், ஒருநாள் காலதாமதமாக 26.01.2025ம் தேதி அன்று முதல் தகவல் ்அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கை 10.02.2025 ம் தேதி அன்று காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படிகாலதாமதம் குறித்து தனி அறிக்கை எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள் தங்களுடைய கவனக்குறைவால் வேறு ஏதோ ஒரு போக்கு வாகனத்தில் விபத்தில் சிக்கிகொண்டார்கள் என்றாலும், அவர்களின் குடும்பத்திற்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தில் தவறான வழக்கு எதிரியின்மீது பதியப்பட்டு அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து

எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்னவாறு எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be correct

THAARINI V C

Digitally signed by THAARINI V C
Location: Judicial Magistrate No.1, Perambalur
Date: 2026.06.25 18:47:10 +0530

Judicial Magistrate No.1
Perambalur.